# 13 நாயன்மார் நால்வர்

## (அ) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

### 1. அறிமுகம்

தமிழகத்திலே சீர்காழியிலே, வாழ்ந்த சிவபாதவிருதயருக்கும் பகவதி அம்மையாருக்கும் பிள்ளையாக, ஆதிரை நன்னாளிற் சம்பந்தர் அவதரித்தார். அப்பிள்ளை தனது மூன்றாம் வயதிலே, ஒரு நாள் தந்தையாரின் பின்னே சீர்காழிக் கோயிலுக்குச் சென்றார்.

### 2. இறைவன், இறைவி அருள் பெறல்



தந்தையார் குழந்தையைக் குளக் கரையில் இருத்திவிட்டு, குளத்தில் இறங்கி நீராடினார். நீரினுள் மூழ்கிய தந்தையாரைக் காணாத பிள்ளை, 'அம்மையே, அப்பா' என்று அழுதது. அப்பிள்ளைக்கு அருள் புரியத் திருவுளங் கொண்ட சிவபெருமான், உமாதேவியாருடன் விடையில் ஏறி அங்கு எழுந்தருளினார். உமையம்மையார் தம்முடைய திருமுலைப்பாலைப் பொற்கிண்ணத்தில் எடுத்து, அப்பிள்ளைக்கு ஊட்டினார். அப்பிள்ளையின் அழுகையை நிறுத்திவிட்டு, சிவபெருமான் உமாதேவியாரோடு மறைந்தருளினார். நீராடிவிட்டுக் கரையேறிய சிவபாதவிருதயர் பிள்ளையின் வாயில் பால் வடிந்திருப்பதைப் பார்த்தார். 'நீ யார் தந்த பாலைப் பருகினாய்?' என்று பிள்ளையைக் கேட்டார். அப்பொழுது விண்ணிலே உமையம்மையாரோடு விடைமீது தோன்றிய சிவபெருமானைச் சுட்டிக் காட்டி, **''தோடுடைய செவியன்''** எனற பதிகத்தைப் பாடத் தொடங்கினார். தந்தையார், மிகமகிழ்ச்சி அடைந்தார். பிள்ளையுடன் கோயிலுக்குட் சென்று, தோணியப்பரை வணங்கினார். இறைவனால் ஆட்கொள்ளப்பட்டமையால், **''ஆளுடைய பிள்ளையார்''** எனவும் சிவஞான சம்பந்தம் பெற்றமையால் **''திருஞானசம்பந்தர்''** எனவும் அப்பிள்ளை பெயர்கள் பெற்றது. அன்று தொடக்கம் தந்தையார், சம்பந்தரைத் தம் தோளிற் சுமந்து கொண்டு சென்று, கோவில்களை வணங்குவது வழக்கமாயிற்று.

சம்பந்தர் திருக்கோலக்கா என்னும் திருத்தலத்தை அடைந்து, தமது கையினால் தாளமிட்டு, அங்குள்ள இறைவனைப் போற்றி, **''மடையில் வாளை''** என்னும் பதிகத்தைப் பாடினார். அப்பொழுது அவருடைய கை வருந்தக்கூடாது என்பதற்காக, கருணை கூர்ந்த இறைவன் ஐந்தெழுத்துப் பொறிக்கப்பட்ட பொற்றாளத்தைக் கையிற் கிடைக்கச் செய்தார். ஆனால், பொற்றாளத்தில் ஓசை எழவில்லை. எனவே, இறைவி அத்தாளத்துக்கு ஓசை கொடுத்தருளினார். அதன் காரணமாக, அங்குள்ள இறைவியின் பெயர் **'ஓசை கொடுத்த நாயகி'** என வழங்குகின்றது.

### 3. தலயாத்திரை செய்தல்

ஆளுடைய பிள்ளையார் ஞானப்பால் உண்டு, பொற்றாளம் பெற்ற செய்தி சோழ நாடெங்கும் பரவியது. அடியார்கள் திரள் திரளாக வந்து சம்பந்தரைத் தத்தம் ஊர்களுக்கு எழுந்தருளுமாறு வேண்டினர். அதற்கு இணங்கிய சம்பந்தர், முதற்கண் தம் தாயின் பிறப்பிடமாகிய திருநனிபள்ளியைத் தரிசித்தார். பின்னர், சம்பந்தர் பல தலங்களையுந் தரிசித்துக் கொண்டு சீர்காழிப் பதியை அடைந்தார்.

சிதம்பரத்தை அடுத்துள்ள திருவெருக்கத்தம்புலியூரில் வாழ்ந்த திருநீலகண்டப் பெரும்பாணரும் அவருடைய மனைவியும் சீர்காழிக்கு வந்து சம்பந்தரை வணங்கிப் பாடல்களை யாழிசைத்துப் பாடினர். அதனைக் கேட்டு மகிழ்ந்த சம்பந்தர், தாம் பாடும் பதிகங்களை யாழில் அமைத்துப் பாடுமாறு பாணருக்கு அருள் செய்தார்.

### 4. சமயத்தின் முதற்குரவராதல்

தந்தையார் தோளிற் சுமந்து செல்ல, சிதம்பரம் முதலிய பல தலங்களையுஞ் சென்று வணங்கிய பின், சம்பந்தர் திருப்பெண்ணாகடத் திருத்தூங்கானை மாடத்தைத் தொழுது, பின் திருவரத்துறையை வணங்குவதற்குத் தந்தையாரின் தோளிலிருந்து இறங்கித் தாமே நடந்து சென்றார். நடந்து பழக்கப்படாத அவருடைய திருவடிகள் அப்பொழுது மிகவும் வருத்தமுற்றன. எனவே, அவர் மெதுவாக நடந்து, மாறன்பாடியை அடைந்து, அன்றிரவு அங்கே தங்கினார். அவருடைய வருத்தத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாத அரத்துறைநாதர், அவ்வூர் அடியார்களுக்குக் கனவிலே தோன்றி, ''ஞானசம்பந்தன் நம்மிடம் வருகின்றான். அவனுக்குக் கொடுப்பதற்காக முத்துச் சிவிகையும் முத்துக் குடையும் முத்துச் சின்னங்களும் நம் திருக்கோயிலில் வைத்திருக்கின்றோம். நீங்கள் அவற்றை அவன்பாற் கொண்டு செல்லுங்கள்'' என்று பணித்தருளினார்.



இலவச விநியோகத்திற்காக

அடியார்கள் காலையிற் கோயிலைத் திறந்தபொழுது, தாம் கனவிற் கண்டவாறு எல்லாம் இருப்பதைக் கண்டு வியந்து, அவற்றைச் சம்பந்தரிடம் எடுத்துச் சென்றனர். சம்பந்தருக்கும் அன்றிரவு கனவில் இறைவன் இச்செய்தியைத் தெரிவித்திருந்தார். சம்பந்தர், அச்சிவிகையை ஐந்தெழுத்தோதி, வணங்கி அதன் மீது எழுந்தருளினார். முத்துக் குடைகள் நிழற்றின. முத்துச் சின்னங்கள் ஒலித்தன. திருவரத்துறையை அடைந்த பிள்ளையார் தூரத்தே கீழே இறங்கி, கோயிலை அடைந்து, இறைவனை வணங்கி, **''எந்தை ஈசன் எம்பெருமான்''** என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார். இங்கு கூறிய விருதுகள் ஆசாரியத் தகுதி பெற்றவர்களுக்கே உரியன. எனவே, சிவபெருமானின் திருவருளால் சம்பந்தர், நமது ச**மயத்தின் முதற்குரவர்** ஆனார்.

## 5. யாழ்முரிப் பதிகம் பாடுதல்

சம்பந்தர் பதிகங்கள் பாடும்பொழுது, திருநீலகண்டப்பெரும்பாணர் யாழை மீட்டி உடன் வாசிப்பார். இருவருஞ் சேர்ந்து பல தலங்களுக்குச் சென்று, இறைவனை இசையால் வழிபட்டு வந்தனர். பாணரின் திறத்தை**''நக்கமேகுவர்''** என்னுந் தேவாரத்தில் சிறப்பித்துப் பாடியுள்ளார். இருவரும் திருத்தருமபுரத்தை அடைந்த பொழுது, பாணரின் சுற்றத்தார் அவர்களை எதிர்கொண்டு வணங்கினர். பாணர் சம்பந்தரின் திருப்பதிகங்களை யாழிலிட்டு வாசிக்கும் பேறு கிடைத்ததை அவர்களிடம் கூற, அவர்கள் பாணர் திருப்பதிகங்களை யாழில் இட்டு வாசிப்பதனால் திருப்பதிகங்கள் சிறப்புறுகின்றது என்றனர். உடனே, பாணர் மனம் நடுங்கி, சம்பந்தரை நோக்கி, 'திருப்பதிக இசை அளவுபடாத அரிய தன்மையுடையது என்பதனை எல்லோருமறிய ஒரு திருப்பதிகம் பாட வேண்டும்' என்று வேண்ட, சம்பந்தர் **''மாதர் மடப் பிடியும்''** என்ற பதிகத்தைப் பாடினார். பாணரால் அதனை யாழில் இட்டு வாசிக்க முடியவில்லை. அதனால் அப்பதிகம், **'யாழ்முரி'** எனவும் அப்பண் **'யாழ்முரிப் பண்'** எனவும் வழங்கப்படுகிறது.

## 6. அற்புதங்கள் செய்தல்

சமய குரவர்கள் எல்லா உயிர்களிடத்தும் அன்பு பூண்டு ஒழுகும் அருளாளர்கள். பிறர் துன்பங்களைத் தம் துன்பங்கள் போல் எண்ணி, அவற்றைத் துடைக்க முற்படுவார்கள். அதனால், செயற்கரிய செயல்கள் (அற்புதங்கள்) நடைபெறுகின்றன. எனினும், அவர்கள் அவற்றைத் தம் செயல்களாகக் கருதாது, இறைவன் செயலென்றே கொள்வர். அந்த அடிப்படையில், சம்பந்தரும் பல தலங்களுக்கும் சென்று, இறை வழிபாடு செய்ததோடு, மக்களின் துன்பங்களையுந் துடைத்தார்.

### i. முயலகன் நோயை நீக்குதல்

சம்பந்தர் திருப்பாச்சிலாச்சிரமத்தை அடைந்தபொழுது, அங்கு ஆலயத்தினுள்ளே கொல்லிமழவன் என்ற அரசனின் மகள் முயலகன் நோயினால் வருந்துவதைக் கண்டார். அவர், **''துணிவளர் திங்கள்''** என்ற பதிகத்தைப் பாடி, அவளுடைய நோயை நீக்கினார்.

### ii. குளிர்ச்சுரம் நீக்குதல்

பின்னர் கொடிமாடச் செங்குன்றூர் என்னும் இடத்தில், பனியின் கொடுமையால், தம் அடியார்களும் பிறரும் குளிர்ச்சுரத்தால் வருந்துவதைக் கண்டார். எனவே, அவ்வருத்தத்தை, **''அவ்வினைக் கிவ்வினை''** என்ற பதிகத்தைப் பாடித் தீர்த்தார்.

### iii. உலவாக்கிழி பெறுதல்

ஒருபொழுது அவருடைய தந்தையார் யாகஞ் செய்வதற்குப் பொன் தேவை என்று சம்பந்தருக்குக் கூறினார். அப்பொழுது, **''இடரினுந் தளரினும்''** என்ற பதிகம் பாடி, சிவனருளால் ஆயிரம் பொன் உள்ளடங்கிய முடிச்சு (உலவாக்கிழி) ஒன்றைப் பெற்று, தந்தையாருக்குக் கொடுத்தார்.

### iv. பாம்பு தீண்டி இறந்த வணிகனை உயிர்ப்பித்தல்

சம்பந்தர் திருமருகலை அடைந்தபொழுது, கன்னி ஒருத்தியுடன் வழிப்பயணமாக வந்த வணிகன் ஒருவன் அரவு தீண்டி இறந்தான். அதனைக் கண்டு இரக்கமுற்று, **''சடையாயெனுமால்''** என்னும் பதிகம் பாடி வணிகனை உயிர்ப்பித்தார். பின்னர், அவர்களிருவருக்கும் திருமணம் செய்து அனுப்பினார்.

### v. சிவபெருமானைப் பாடிப் படிக்காசு பெறுதலும் திருக்கதவை மூடச் செய்தலும்

சம்பந்தர் திருவீழிமிழலைக்குச் சென்றபொழுது அங்கு மழைவளங் குன்றி, பஞ்சம் ஏற்பட்டிருந்தது. அடியார்கள் யாவரும் பசிப்பிணியால் வருந்தினர். எனவே, சம்பந்தரும் நாவுக்கரசரும் சிவபெருமானைப் பாடிப் படிக்காசு பெற்றனர். அக்காசைக் கொண்டு இருவரும் அடியார்க்கு அமுது செய்வித்துப் பசிப்பிணி நீக்கினர். பின்னர், திருமறைக்காட்டில் தேவாரம் பாடித் திருநாவுக்கரசர் திறந்த திருக்கதவை, சம்பந்தர் **''சதுரம் மறை''** என்று தொடங்கும் பதிகம் பாடி, அடைக்கச் செய்தார்.


இலவச விநியோகத்திற்காக

**vi. பாண்டிய மன்னனின் வெப்பு நோயைத் தீர்த்தல்**

பாண்டி நாட்டை ஆண்ட கூன்பாண்டியன் என்பவன் சமண சமயத்தைக் கடைப்பிடித்தான். அதனால், அந்நாட்டு மக்களும் அச்சமயத்தைச் சேர்ந்தனர். அதனால் வருந்திய பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் சில அடியார்களைத் திருஞானசம்பந்தரிடம் அனுப்பித் தம் இன்னலை அறிவித்தனர். அதனால், மதுரைக்கு வந்த சம்பந்தர், ஒரு மடத்தில் அடியார் குழாத்துடன் தங்கினார். அன்றிரவு சமணர்கள் அரசனுடன் சேர்ந்து ஆலோசித்து, அம்மடத்துக்குத் தீ இட்டனர். அதனை அறிந்த சம்பந்தர், **''செய்யனே திருவாலவாய்''** என்ற பதிகம் பாட அத்தீயானது தணிந்து, வெப்பு நோயாகப் பாண்டியனை வருத்தியது. அரசனுடைய நோயைத் தீர்ப்பதற்குச் சமணர்கள் செய்த மந்திர தந்திரங்களால் நோய் தீராது மிகுந்தது. அப்பொழுது அங்கு அழைத்துவரப்பட்ட சம்பந்தரை அரசன் தன் தலைப்பக்கத்தில் ஒரு பீடத்தில் அமரும்படி கூறினான். பின்னர், அரசன் தனது நோயைத் தீர்ப்பவர்கள் வெற்றிபெற்றவர்களாவர் என்று கூறினான். சமணர்கள் மயிற் பீலியினால் தடவ நோய் மிகவும் அதிகரித்தது. மன்னன் சம்பந்தரை வேண்ட, அவர் சிவபெருமானை வணங்கி, **''மந்திர மாவது நீறு''** என்ற பதிகம் பாடி, அவனுடைய மேனியிலே திருநீறு இட, வெப்பு நோய் தீர்ந்தது.

**vii. அனல்வாதம், புனல்வாதம் செய்து சைவத்தை நிலைநாட்டல்**

பின்னர் சமணர்கள் சம்பந்தரை அனல்வாதத்திற்கு அழைத்தனர். அதற்காகச் சம்பந்தர், **''தளிர் இளவளரொளி''** என்ற பதிகம் பாடித் தீயிலிட்டார். சமணர்களும் ஓர் ஏட்டைத் தீயிலிட, அது எரிந்து சாம்பராக, சம்பந்தரின் ஏடு எரியாது இருந்தது. அதன் பின் சமணர்கள் சம்பந்தரைப் புனல்வாதத்திற்கு அழைத்தனர். அதற்காக, சமணர்கள் **''அத்தி நாத்தி''** என்று எழுதிய ஏட்டை வைகை ஆற்றில் விட, அது கடலுக்குச் சென்றது. சம்பந்தர்,**''வாழ்க அந்தணர்''** என்ற பதிகம் எழுதிய ஏட்டை இட, அது ஆற்றை எதிர்நோக்கிச் சென்றது. சம்பந்தரின் ஏட்டில் **'வேந்தனும் ஓங்குக'** என்று அருளியமையால் அரசனது கூனும் நிமிர்ந்து, **நின்ற சீர்நெடுமாறன்** என்ற பெயரையும் பெற்றான். அவன் சைவத்தின் சிறப்பை உணர்ந்து, அதனைப் பின்பற்றினான்.

**viii. இலங்கையிலுள்ள சிவாலயங்களைப் பாடுதல்**

சில நாள்கள் கழிந்தபின், சம்பந்தர் தம் அடியார்களோடு, இராமேச்சரத்தை அடைந்து திருப்பதிகம் பாடி, அங்கே இருந்தருளினார். அங்கிருந்தே ஈழ நாட்டிலுள்ள திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் என்னுந் தலங்களையும் மானசீகமாக வணங்கித் திருப்பதிகம் பாடியருளினார்.

**ix. பூம்பாவையை உயிர்ப்பித்தல்**

திருமயிலாப்பூரிற் சிவநேசர் என்ற அடியாரின் மகள் பூம்பாவை என்பவள் பாம்பு தீண்டி இறந்தாள். அவளுடைய எலும்பைத் தந்தையார் குடத்திலிட்டு வைத்திருந்தார். சம்பந்தர் திருமயிலாப்பூருக்கு வந்த போது, பூம்பாவையின் எலும்புகளடங்கிய குடத்தைக் கபாலீசுவரர் திருமுன் கொண்டு வரச் செய்து, **''மட்டிட்ட புன்னை''** என்ற பதிகத்தைப் பாடினார். அப்பொழுது, பூம்பாவை குடத்தை உடைத்துக் கொண்டு உருப்பெற்று எழுந்தாள். சிவநேசர் தம் மகளைப் சம்பந்தர் மணக்க வேண்டும் என்று இரக்க, அவளைத் தான் உயிர்ப்பித்ததால் அவளுடைய தந்தைபோல இருப்பதாகக் கூறி மறுத்தார்.

**ix. முத்திப்பேறு**

சம்பந்தர் சீர்காழியை அடைந்தபோது, அவருடைய பெற்றோருஞ் சுற்றத்தாரும் அவரைத் திருமணஞ் செய்யுமாறு வேண்ட, அவர் அதற்கு உடன்படவில்லை. அவர்கள் மீண்டும் மீண்டும் வற்புறுத்தியதனால் ஒருவாறு இசைந்தார். எனவே, திருநல்லூர்ப் பெருமணத்தில் வாழ்ந்த நம்பாண்டார் நம்பிகளின் மகளைத் திருமணஞ் செய்து கொடுக்க ஏற்பாடாயிற்று. சம்பந்தர் மணமகளைக் கையிற் பிடித்து அக்கினியை வலம் வந்தபொழுது 'இந்த இல்வாழ்க்கை கிடைத்தது, நான் இவளொடு சிவபெருமான் திருவடியை அடைவேன்' என்றெண்ணி, திருநல்லூர்ப் பெருமானை வணங்கி, **''கல்லூர்ப் பெருமணம்''** என்னும் பதிகத்தைப் பாடினார். அப்பொழுது ''நீயும் உன் மனைவியும் திருமணங் காண வந்தவர் அனைவரும் இந்தச் சோதியிற் கலந்து நம்மை வந்தடையுங்கள்'' என்று ஓர் ஒலி கேட்க, சோதி ஒன்று தோன்றியது. சம்பந்தர், **''காதலாகிக் கசிந்து''** என்னும் நமச்சிவாயப் பதிகத்தை ஓதி, எல்லோரையுஞ் சோதியுட் புகுமாறு பணித்தார்; பின்னர் தாமும் மணமகளுடன் அதனை வலம் வந்து, அச்சிவசோதியுட் கலந்தார். ஒரு வைகாசி மாத மூல நட்சத்திரத்தன்று இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது.

சம்பந்தர், பக்தி இயக்கத்துக்குத் தலைமை தாங்கினார். அதனால், அவர் சென்ற இடமெல்லாஞ் சிவனடியார்களுங் கூட்டமாக அவருடன் சென்றனர். அவர்களிடையே பிறப்புப் பற்றிய உயர்வு தாழ்வு இருக்கவில்லை. அவருக்கு



இலவச விநியோகத்திற்காக

பாலறாவாயர், ஆளுடைய பிள்ளையார், கவுணியர் கோன், தென்புகலி வேந்தன், பரசமய கோளரி, காழி வேந்தர் முதலிய பிற பெயர்கள் வழங்குகின்றன.

திருஞானசம்பந்தர் செய்த அற்புதங்களைச் சித்தாந்த சாத்திர, நூலாகிய திருக்களிற்றுப்பாடியார்,

**"ஓடம் சிவிகை உலவாக் கிழியடைக்கப்**
**பாடல் பனைதாளம் பாலைநெய்தல் - ஏடேதிர் வெப்(பு)**
**என்புக் குயிர்கொடுத்தல் ஈங்கிவைதாம் ஓங்கு புகழ்த்**
**தென்புகலி வேந்தன் செயல்" எனக் குறிப்பிடுகின்றது.**

**"பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி"**

## (ஆ) திருநாவுக்கரசு நாயனார்

### 1. அறிமுகம்

மருணீக்கியார் என்னும் இயற்பெயர் கொண்ட திருநாவுக்கரசு நாயனார், திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் பிறந்தார். இவரின் தந்தை பெயர் புகழனார். தாயார் பெயர் மாதினியார். மருணீக்கியாருக்கு திலகவதியார் என்ற பெயருடைய தமக்கையார் இருந்தார். திலவதியார் மணப்பருவம் எய்தினார். அரசனின் சேனாதிபதியாகிய கலிப்பகையார் திலகவதியாரை மணஞ்செய்ய நிச்சயித்திருந்தனர். திருமணத்திற்கு முன்னரே மன்னனின் பணிப்பினால் போருக்குச் சென்ற கலிப்பகையார், அங்கு வீரசுவர்க்கம் அடைந்தார். இச்சம்பவத்திற்கு முன்னரே புகழனார் நோய்வாய்ப்பட்டு இறக்க, மனைவியாரும் அக்கால வழக்கத்துக்கு இணங்க உடன்கட்டை ஏறினார். தாய் தந்தையரை இழந்த திலகவதியார், கலிப்பகையாரின் மரணத்தையும் கேள்வியுற்று தாமும் இறக்கத் துணிந்தார். அதனை அறிந்த மருணீக்கியார் தமக்கையாரை நம்பி வாழ்ந்த நிலையில், அவர் இறப்பதாயின், தாம் அதற்கு முன்னரே இறக்கப் போவதாகக் கூறினார். இதனைக் கேட்ட திலகவதியார் தமது முடிவை மாற்றிக் கொண்டார். எல்லா உயிர்களிடத்தும் அன்பும், அருளும்கொண்டு கைம்மை நோன்பு நோற்று வந்தார்.



### 2. மருணீக்கியார் நாவுக்கரசராதல்

இளம் வயதிலே, கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய மருணீக்கியார் சமய ஆய்வில் ஈடுபட்டார். உண்மைச் சமயம் எதுவென்ற தெளிவில்லாமையால் பாடலிபுரத்திலுள்ள சமணப் பள்ளியையடைந்து சமண சமயத்தைச் சேர்ந்தார். அவர் அச்சமயத்திற் புலமை பெற்று, சமணக்குழு ஒன்றின் குருவாக உயர்ந்து **"தருமசேனர்"** என்னும் பெயர் பெற்றார்.

தம்பியாரின் சமயநெறிப் பிறழ்வால் மனம் வருந்திய திலகதியார், தம் தம்பியைச் சைவ சமயத்துக்கு மீட்டுத் தரும்படி சிவபெருமானை வேண்டினார். சிவபெருமான் திலகவதியாரின் கனவில் தோன்றி, "உன் தம்பி முன்னர் முனிவனாய் இருந்து என்னை அடையத் தவம் செய்தவன். அவனுக்குச் சூலை நோய் கொடுத்து ஆட்கொள்வோம்" என்று கூறினார். அவ்விதமே தருமசேனருக்கு அவரின் குடலைப் பிடித்து முடக்கி வருத்துகின்ற சூலை நோய் உண்டாயிற்று. அவரின் நோயைச் சமணர்களால் நீக்க முடியாமற் போகவே, அவர் இரவோடிரவாகத் தமக்கையாரிடம் போய்ச் சேர்ந்தார். மறுநாட்காலை திலகவதியாருடன் சென்று, திருவதிகை வீரட்டானேசுரரை வணங்கி, தமது கொடிய சூலை நோயை நீக்கியருளும்படி **"கூற்றாயின வாறு...."** ஏன்று தொடங்கும் முதலாவது திருப்பதிகத்தைப் பாடினார். உடனே அவரின் சூலை நோய் நீங்க, ஓர் அசரீரி அவருக்கு **"நாவுக்கரசர்"** என்ற பெயரைச் சூட்டியது. அன்று முதல் மருணீக்கியார் **"திருநாவுக்கரசர்"** என அழைக்கப்பட்டார்.

### 3. நாவுக்கரசரின் அற்புதங்கள்

தமது சமய குருவான தருமசேனர் சைவ சமயத்திலே சேர்ந்து, சமண சமயத்தை இகழ்ந்து விட்டார் எனச் சமணர்கள் பல்லவ மன்னனிடம் முறையிட்டனர். எனவே, அம் மன்னன் நாவுக்கரசரை அழைத்து வருமாறு அமைச்சரைப் பணித்தான். அரசனின் கட்டளையைக் கூறிய அமைச்சரைப் பார்த்து, **"நாமார்க்கும் குடியல்லோம்"** எனும் திருத்தாண்டகத்தைப் பாடி, அரசனிடம் செல்ல மறுத்தார். அமைச்சர் நாவுக்கரசரின் திருவடிகளில் பல முறை விழுந்து, இரந்து வேண்ட அவர், எல்லாம் சிவன் செயல் என எண்ணி, அமைச்சருடன் சென்றார்.



இலவச விநியோகத்திற்காக

### i. திருநாவுக்கரசர் சமணர்களால் துன்பமடைதல்

சமணர்களின் வேண்டுகோளின்படி அரசன் நாவுக்கரசரை நீற்றறையில் அடைக்கும்படி பணித்தான். அவ்வாறே நாவுக்கரசரை மிக வெம்மையான நீற்றறையில் ஏழுநாட்கள் வரை அடைத்து வைத்திருந்தனர். நாவுக்கரசர் சிவபெருமானை வணங்கி, **''மாசில் வீணையும் மாலை மதியமும்''** என்னும் தேவாரப் பதிகத்தைப் பாட, அவ்வறை மிகவும் குளிர்மையாகியது. அதனால், அவர் சிறிதும் வருந்தாமல் இருந்தார்.

நாவுக்கரசரை எவ்வாறேனும் கொல்ல வேண்டும் என உறுதி பூண்ட சமணர்கள், நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்ணக் கொடுத்தனர். நஞ்சை அமுதாகக் கொண்ட கடவுளின் அடியார்க்கு, நஞ்சும் அமுதாம் என எண்ணி, அவர் அந்த நஞ்சை உட்கொண்டும் இறவாதிருந்தார்.

நீற்றறையில் எரியாது, நஞ்சினால் மடியாது இருந்த நாவுக்கரசரை, மதங்கொண்ட யானையை ஏவிவிட்டுக் கொல்வதே சரியென எண்ணி, யானையை ஏவினர். நாவுக்கரசர் சிறிதும் பயமின்றி, **''சுண்ணவெண் சந்தனச் சாந்தும்''** என்று தொடங்கும் பதிகத்தைப் பாடி இறைவனைச் சரணடைந்தார். அப்பொழுது அந்த யானை அவரை வணங்கி அப்பாற் சென்று, ஏவியவர்கள் பலரைக் கொன்றது.

சமணர்கள் அரசனிடம் சென்று, ''தருமசேனர் எம்மிடங் கற்ற மந்திர தந்திரங்களால் யானையை அடக்கி, பிழைத்துக் கொண்டார், இனி அவரைக் கல்லிலே கட்டிக் கடலில் எறிதல் வேண்டும்'' என்றனர். அரசனும் அவ்வாறே செய்யும்படி பணித்தான். நாவுக்கரசர் சிவபிரானை நினைந்துருகி, **''சொற்றுணை வேதியன்''** என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாட, கல் தெப்பமாக மிதந்தது. அவர் திருப்பாதிரிப்புலியூர் என்னும் சிவத்தலத்தின் கரையைச் சென்றடைந்தார். இவற்றை அறிந்த வேந்தன் நாவுக்கரசரிடம் வந்து பணிந்து மன்னிப்புப் பெற்றுச் சைவனாகினான். பாடலிபுரத்துச் சமணப்பள்ளிகளை அகற்றி, தன் பெயரோடு இணையக் **குணதரவீச்சரம்** என்னும் சிவாலயத்தையும் தாபித்தான்.

### ii. திருநாவுக்கரசருக்கு இடப, சூலக் குறிகள் பொறிக்கப்பட்டமை

நாவுக்கரசர் பல தலங்களுக்குச் சென்று, வணங்கி, பாடித் தொண்டுகள் புரிந்தார். அவர், ஒவ்வொரு ஆலயத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலுள்ள புல் பூண்டுகளை உழவாரத்தினால் சுத்தஞ் செய்வார். அவருடைய சிவதொண்டைச் சிறப்பித்து **உழவாரப் படையாளி** என்று அவரைக் குறிப்பிடுவது வழக்கம்.

திருநாவுக்கரசர் தல யாத்திரையின் போது, திருத்தூங்கானை மாடமென்னுந் திருப்பதியையடைந்து சிவபிரானை நோக்கி, ''பிறசமயத்தொடக்குண்டு வருந்திய இவ்வுடலுக்கு, உம்முடைய சூல, இடப இலச்சினைகளை பொறித்தருள வேண்டும்'' எனப் பிரார்த்தித்து, **''பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்''** எனுந் திருப்பதிகம் பாடினார். அப்பொழுது இறையருளால் சூல, இடப இலச்சினைகள் நாவுக்கரசரின் தோளிற் பொறிக்கப்பட்டன.

### iii. பாம்பு கடித்திறந்த அப்பூதியடிகளின் மகனை உயிர்ப்பித்தமை

திருநாவுக்கரசர் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்த அப்பூதியடிகள், நாவுக்கரசரின் பெயரால் தண்ணீர்ப் பந்தல்கள், மடங்கள் என்பனவற்றை அமைத்து, அறப்பணிகள் செய்து வந்தார். அதனை அறிந்த நாவுக்கரசர், அப்பூதியடிகளின் இல்லத்துக்குச் சென்றார். அவரை அப்பூதியடிகள் வரவேற்றுத் திருவமுது செய்யும்படி வேண்டினார். நாவுக்கரசர் அதற்கு உடன்படவே, திருவமுது படைக்க ஆயத்தஞ் செய்யப்பட்டது. அவ்வேளை, அப்பூதியடிகளின் மகன் மூத்த திருநாவுக்கரசு வாழையிலை அரியும்போது பாம்பு தீண்டி இறந்தான். அவ்விடயத்தினை அப்பூதியடிகளும் மனைவியாரும் மறைத்து, திருவமுது செய்ய நாயனாரை வேண்டினார்கள். நிகழ்ந்தவற்றைத் திருவருட் குறிப்பால் உணர்ந்து, மூத்த திருநாவுக்கரசின் உடலைக் கோவிலுக்கு வருவித்து, **''ஒன்று கொலா மவர் சிந்தை''** என்னும் திருப்பதிகத்தைப் பாடி உயிர் பெற்றெழச் செய்தார்.

### iv. மறைத்து வைத்திருந்த சிவலிங்கத்தை வெளிக்கொணர்ந்தமை

திருப்பழையாறையிலே வடதளி என்னும் ஆலயத்திலுள்ள சிவலிங்கத்தைச் சமணர்கள் மறைத்து, தங்கள் பள்ளிகளைக் கட்டி வைத்திருந்ததை அறிந்த நாவுக்கரசர். ''சுவாமி, தேவரீரது வண்ணங்கண்டு, வணங்கியன்றிப் போகேன்'' என்று கூறி உண்ணாவிரதம் இருந்தார். சிவபெருமான் சோழ அரசனின் கனவில் தோன்றி, திருநாவுக்கரசரின் நிலையைக் கூறி, ''என்னை வெளிக்கொணர்வாய்'' என்று கூறி, தாம் இருக்கும் இடத்தின் அடையாளத்தையும் காட்டினார். சோழ மன்னன் மறு நாட்காலையில் மறைந்திருந்த சிவலிங்கத்தை வெளிக்கொணர்ந்து, பின்னர் கோவிலமைத்தான். நாவுக்கரசர் சிவபெருமானைக் கண்ணாரத் தரிசித்து, தேவாரப் பதிகம் பாடி வழிபட்டார்.


இலவச விநியோகத்திற்காக

### v. சிவபெருமான் பொதிசோறு அருளியமை

திருநாவுக்கரசர் திருப்பைஞ்ஞீலியை நோக்கிச் செல்லும்போது, பசியினாலும் தாகத்தினாலும் மிகவும் களைத்திருந்தார். அடியவரின் களைப்பை நீக்கியருளத் திருவுளங் கொண்ட சிவபெருமான், அவர் வரும் வழியில் ஒரு சோலையையும் குளத்தையும் உண்டாக்கி, சிவனடியார் வடிவத்தோடு பொதிசோறு வைத்துக் கொண்டிருந்தார். நாவுக்கரசர் வந்ததும் அவருக்குப் பொதிசோறும் நீரும் தந்து, அவர் களைப்பை நீக்கி, அவரோடு திருப்பைஞ்ஞீலி வரை சென்று திடீரென மறைந்தார்.

### vi. கைலாயத்தைத் தரிசித்தமை

திருக்கைலாய மலையிலே சிவபெருமான் பார்வதியோடு எழுந்தருளியிருக்கும் காட்சியைக் காண விரும்பிய நாவுக்கரசர், காசியை அடைந்து கால்கள், கைகள் தேய, உடம்பால் நடந்து உடம்பும் தேய ஓரிடத்தில் கிடந்தார். சிவபெருமான் முனிவர் வேடந் தாங்கி வந்து, ''தேவர்களும் செல்ல முடியாத கைலாசகிரியை மனிதர்களால் அடைவது எளிதா? நீ திரும்பிச் செல்வதே நல்லது'' என்று கூறினார். ''தரிசனம் காணாமல் போகப் போவதில்லை'' என்று நாவுக்கரசர் தமது மனத்திடத்தைத் தெரிவிக்க, முனிவர் சிவபெருமானாகக் காட்சியளித்து, அங்குள்ள தடாகத்தில் மூழ்கி, திருவையாற்றை அடைந்து, தமது கைலாயத் திருக்கோலத்தைக் காணும்படி கூறியருளினார். நாவுக்கரசர் அவ்வாறே திருக்கைலாயக் கோலத்தைத் திருவையாற்றில் தரிசித்தார்.

### vii. சம்பந்தர் நாவுக்கரசரை ''அப்பர்'' எனப் போற்றுதல்

திருஞானசம்பந்தரின் சிறப்பினை அறிந்த நாவுக்கரசர், அவரைக் காணச் சீர்காழியை நோக்கிச் செல்ல, அதனை அறிந்த சம்பந்தர் அடியார்கள் புடைசூழ இவரை எதிர் கொண்டு வரவேற்றார். நாவுக்கரசர் சம்பந்தரின் பாதங்களில் வீழ்ந்து வணங்க, சம்பந்தர் தாமும் அவரை வணங்கி, ''அப்பரே'' என்றழைத்தார். அன்று முதல் நாவுக்கரசுருக்கு **''அப்பர்''** என்னும் திருநாமமும் வழங்கி வரலாயிற்று.

### viii. திருவீழிமிழலையில் படிக்காசு பெற்று பஞ்சம் தீர்த்தல்

அப்பரும், சம்பந்தரும் திருவீழிமிழலைக்குச் சென்றபோது, அங்கு மழையின்மையால் மக்கள் வறுமையால் வாடினர். இந்நிலையில் இவ்விருவரதும் கனவில் தோன்றிய சிவபிரான், '' அடியார்க்கு உணவு வழங்குவதற்கு நாம் படிக்காசு அளிக்கிறோம்'' என்று கூறினார். அதன்படி தினமும் கோயிலின் பீடத்தில் இருவருக்கும் படிக்காசு வைக்கப்பட்டிருக்க, அதை எடுத்து அவர்கள் மக்களின் பசிப்பிணியைப் போக்கினர்.

### ix. திருமறைக்காட்டுக் கதவு திறக்கப் பெறல்

திருமறைக்காட்டில் உள்ள சிவன் கோயிலை அப்பரும், சம்பந்தரும் தரிசிக்கச் சென்றபோது. அங்கு, முன்னர் வேதங்களாற் பூசிக்கப்பட்டுப் பூட்டப்பட்ட கதவு திறக்கப் பெறாமையால், மக்கள் வேறு வழியால் சென்று இறைவனை வழிபடுவதனை இருவரும் அறிந்தனர். அதனால், சம்பந்தர் அப்பரை நோக்கி, ''நாம் நேர் வழியிலேயே உள்ளே செல்ல வேண்டும். எனவே, கதவு திறக்கப் பாடுவீராக'' என்றார். அப்பரும் **''பண்ணினேர் மொழியாள்''** எனும் பதிகத்தைப் பாட, கதவு திறந்தது. இருவரும் உள்ளே சென்று இறைவனை வழிபட்டனர்.

### x. சம்பந்தரின் சிவிகையை அப்பர் தாங்குதல்

அப்பரடிகள் திருப்பூந்துருத்தி என்னும் ஊரில் திருமடம் அமைத்து, உழவாரப் பணி புரிந்து வந்தார். சம்பந்தர் பாண்டிநாட்டு யாத்திரை முடித்து, சமணரை வாதில் வென்றபின் தம்மைக் காண வரும் செய்தியறிந்த அப்பர், எதிர்சென்று சம்பந்தரின் சிவிகையைச் சுமந்து வந்தார். நாவுக்கரசரைக் காணும் ஆவலில், ''அப்பர் எங்குற்றார்?'' என்று உடன் வருவோரிடம் வினவ, நாவுக்கரசர், ''உம்மடிகள் தாங்கி வரும் பெருவாழ்வு வந்தெய்தப் பெற்று இங்குள்ளேன்'' என்றார். உடனே, சம்பந்தர் உள்ளம் பதைபதைத்து, சிவிகையை விட்டிறங்கி அப்பரை வணங்கினார். அவரை முந்திக் கொண்டு, அப்பர் அவரை வணங்கினார். இருவரும் பூந்துருத்திப் பெருமானை வழிபட்டுச் சில நாள் இருந்த பின், அப்பர் தென்னாட்டுக்கும் சம்பந்தர் வடநாட்டுக்கும் தல யாத்திரை சென்றனர்.

### xi. பொன்னையும், மணியையும் கல்லையும் சமநோக்குடன் அப்பர் காணல்

அப்பர், பூம்புகலூர்க் கோயிலில் உழவாரத்தொண்டு செய்துவரும் நாளில், அவரின் பற்றற்ற நிலையினை உலகிற்கு எடுத்துக்காட்ட விரும்பிய சிவபிரான், அவரது உழவாரம் நுழைந்த இடங்களிளெல்லாம் பொன்னும், மணியும் கற்களோடு தோன்றி விளங்கும்படி அருள்புரிந்தார். அபபர் பொன்னுக்கும் மணிக்கும், கற்களுக்கும் வேறுபாடு காணாது, எல்லாவற்றையும் எடுத்துக் குளத்துள் எறிந்தார். பின் விண்ணுலக நங்கையர் அவர் முன் ஆடல் பாடல் புரிந்து அவரின் மனதைச் சலனமடையச் செய்ய முயன்றபோதும் அவர் தம்




இலவச விநியோகத்திற்காக

நிலையிலிருந்து தவறவில்லை. **''பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பாநின்ற''** என்னும் பதிகத்தைப் பாட, விண்ணுலக மடந்தையர் அவரை வணங்கி அகன்றனர்.

இறுதியில் திருநாவுக்கரசர் திருப்புகலூரையடைந்து வழிபட்டிருந்து சிவபெருமானின் திருவடிகளை அடையும் ஆசை மிகக்கொண்டு, **''எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ''** என்னுந் திருத்தாண்டகத்தைப் பாடி, இறைவனைப் பிரார்த்தித்தார். இவர் சித்திரை மாதச் சதய நட்சத்திரத்தில் 81 ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார். **''**என் கடன் பணி செய்து கிடப்பதே**''** என சரியை நெறி நின்ற மருணீக்கியாருக்கு தருமசேனர், திருநாவுக்கரசர், நாவுக்கரசு, ஆண்ட அரசு, வாகீசர், அப்பர், தாண்டக வேந்தர், உழவாரப் படையாளி முதலான வேறு பெயர்கள் வழங்குகின்றன.

## (இ) சுந்தரமூர்த்தி நாயனார்



கயிலையிலே சிவபெருமானுக்குத் தொண்டு செய்து வந்த ஆலாலசுந்தரர் தாம் செய்த பிழைக்குத் தண்டனை பெற்றார். அத்தண்டனைக்கு ஏற்ப, அவர் மனிதப் பிறவி எடுக்க வேண்டியதாயிற்று.

### 1. பிறப்பும் சிறப்பும்

ஆலாலசுந்தரர் இந்தியாவிலுள்ள திருமுனைப்பாடி நாட்டிலே, திருநாவலூரிலே வாழ்ந்த ஆதிசைவ வேதியரான சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் குழந்தையாகப் பிறந்தார். அக்குழந்தைக்கு **நம்பியாரூரர்** என்று பெற்றோர் பெயரிட்டனர். ஒரு நாள் வீதியிலே விளையாடிக் கொண்டிருந்த நம்பியாரூரரின் அழகைக் கண்ட அந்நாட்டு அரசரான நரசிங்கமுனையர் அவரைத் தாம் வளர்க்க விரும்பினார். அதற்குப் பெற்றோரும் இசையவே, நம்பியாரூரர் அரண்மனையில் வளர்ந்து வந்தார். அரண்மனையில் வாழ்ந்தாலும், அவர் அந்தணருக்குரிய ஒழுக்கத்தையே பேணி வந்தார். திருமணப்பருவத்தை அவர் அடைந்தபொழுது, புத்தூர்ச் சடங்கவி சிவாசாரியரின் மகளைத் திருமணஞ் செய்வதற்கான ஒழுங்குகள் நடைபெற்றன.

### 2. தடுத்தாட் கொள்ளப்படல்

திருமண நாளன்று நம்பியாரூரர் திருமணப்பந்தலில் மணக்கோலத்தில் வீற்றிருந்தார். அவ்வேளையிற் சிவபெருமான் கிழப்பிராமண வடிவினராகி அவ்விடத்திற்கு வந்து, வழக்குப் பேசித் சுந்தரரைத் தடுத்து அடிமை கொண்டார். இவ்வாறு, அடிமையாக நம்பியாரூரர் பின்னே செல்ல, கிழவர் முன்னே விரைந்து சென்று, திருவருட்டுறைக் கோயிலினுள் மறைந்தார். ''எம்பிரான் கோயிலுக்குள் இவர் ஏன் சென்றார்?'' என ஐயுற்ற நம்பியாரூரர் தனியே கோயிலுக்குட் செனறு, வேதியரைக் கூப்பிட்டு அழைத்தார். அப்பொழுது, இறைவன் இடபாரூடராக விண்ணிலே தோன்றி, நம்பியை நோக்கி, ''நீ முற்பிறப்பில் நமக்குத் தொண்டன்; நம் ஏவலால் மண்ணிற் பிறந்தனை; மண்ணின் வாழ்க்கைத் துன்பம் உன்னைச் சாராதபடி நாமே வந்து தடுத்தாட்கொண்டோம். நம்மை வன்சொற்களால் வைதமையால் உனக்கு **வன்றொண்டன்** என்னும் பெயர் தந்தோம். இவ்வுலகிலே நம்மைச் சொற்றமிழால் பாடுவாயாக'' என்று ஆணையிட்டார். அப்பொழுது நம்பியாரூரர் சிவபெருமானை வணங்கி, ''குற்றமிலாக் குணப்பெருங் கடலே, அடியேன் என்ன சொல்லிப் பாடுவேன்?'' என்று கேட்டார். அதற்குச் சிவபெருமான், ''முன்பு என்னைப் பித்தன் என்றே மொழிந்தனை. ஆதலாலே பித்தன் என்றே பாடு'' என்றார். எனவே, அவர் **''பித்தா, பிறைசூடி''** என்று தொடங்குந் திருப்பதிகத்தை பாடினார். இதுவே நம்பியாரூரர் முதன் முதலாகப் பாடிய தேவாரமாகும்.

### 3. சிவபெருமான் திருவடி வைத்தமை

நம்பியாரூரர் திருநாவலூர் முதலான பல தலங்களுக்கும் யாத்திரை செய்து, பதிகம் பாடினார். திருத்துறையூரில் தவநெறி தர வேண்டி இறைவனைப் பாடி, அவ்வாறே பெற்றார். பின்னர், அவர் திருவதிகையை அடைந்தார். அது அப்பர் உழவாரத்தொண்டு செய்த தலம் என்பதனால், அதனை மிதிக்க அஞ்சி, அந்நகருட் செல்லாது புறத்திலே இருந்த சித்தவட மடத்திலே சிவனடியார்களுடன் அன்றிரவு தங்கினார். அவ்வேளையில், சிவபெருமான் ஒருவரும் அறியாமல் அம்மடத்தினுள்ளே புகுந்து தாமும் உறங்குவது போலக் கிடந்து, நம்பியாரூரரின் தலையில் இருமுறை கால் வைத்தார். நம்பியாரூரர் சினங்கொண்டு ''நீ யார்?'' என்று கேட்டார். சிவபெருமானும், ''நீ என்னை அறியாயோ?'' என்று கூறிவிட்டு மறைந்தார். அப்பொழுது நம்பியாரூரர், **''தம்மானை அறியாத சாதியார் உளரே''** என்ற பதிகம்



இலவச விநியோகத்திற்காக

பாடித் துதித்தார். இவ்வாறாகப் பல தலங்களையும் வணங்கிக் கொண்டு, தில்லையை அடைந்து நடேசப் பெருமானை வணங்கிப் பதிகம் பாடினார். அப்பொழுது, ''திருவாரூரில் நம்மிடம் வருக'' என்று ஓர் ஒலி கேட்க, அவர் திருவாரூரை நோக்கிப் புறப்பட்டார். செல்லும் வழியிற் சீர்காழியை அடைந்து, 'சம்பந்தர் பிறந்தருளிய பெரும்புகலி உள்ளும் நான் மிதியேன்' என்று ஊர் எல்லைப் புறத்தில் வணங்கி வலம்வரும்பொழுது, சிவபெருமானும் எதிரே காட்சி கொடுக்க, **''சாதலும் பிறத்தலுந் தவிர்த்தெனை''** என்ற பதிகத்தைப் பாடி வழிபட்டார்.

அதன் பின்னர், பல தலங்களையும் வணங்கிக்கொண்டு திருவாரூருக்குச் சென்றார். ஆரூரரின் வருகையைத் தியாகேசர், அவ்வூரிலுள்ள அடியார்களுக்கு அறிவித்தார். எனவே, அடியார்கள் பல்வகை வாத்தியங்கள் முழங்க, அவரை எதிர்கொண்டு வரவேற்றனர். அப்பொழுது நம்பியாரூரர் அவ்வடியார்களை நோக்கி, **''கரையுங் கடலும்''** என்று பதிகம் பாடி வணங்கினார்.

### 4. தம்பிரான் தோழராதல்

பின்னர், திருமூலட்டானத்தைச் சூழ்ந்த திருமாளிகை வாயிலிற் புகுந்து வன்மீகநாதரை வணங்கினார். அவ்வேளையில், ''நாம் உனக்குத் தோழரானோம்; நாம் உன்னைத் தடுத்து ஆட்கொண்ட, அந்த மணக்கோலத்துடன் நீ மண்மேல் விளையாடு'' என்று அசரீரி ஒலி கேட்டது. அன்று முதல் அடியார்கள் அவரைத் **தம்பிரான் தோழர்** என்றும் அழைக்கலாயினர்.

### 5. பரவையாரைத் திருமணஞ் செய்தல்

கயிலைச் சேடியரிருவரிற் கமலினியார், திருவாரூரில் பரவையார் என்னும் பெயருடன் வாழ்ந்து வந்தார். அவர் திருவாரூர்க் கோயிலுக்குத் தினமும் சென்று, மாலைகட்டல் முதலான தொண்டுகளைச் செய்து வந்தார். ஒரு நாள் சுந்தரர் அவரைக் கண்டார். இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பினர். இறைவன் திருவருளால் இருவருக்குந் திருமணம் நிறைவேறியது. இல்வாழ்க்கையில் ஈடுபட்ட சுந்தரர் அடியார்க்கு அமுது செய்வித்தல், இறைவன் புகழ் பாடல் ஆகிய பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

### 6. சுந்தரர் திருத்தொண்டத் தொகையைப் பாடியமை

ஒருநாள் அவர் திருவாரூர்க் கோயிலுக்குச் செல்லும்பொழுது, முற்புறத்திலுள்ள தேவாசிரியன் என்னும் மண்டபத்திற் கூடியிருந்த அடியார்களைக் கண்டார். உடனே, ''இந்த அடியார்களுக்கு நான் அடியவனாகும் நாள் எந்நாள்?'' என்று இறைவனிடங் கேட்டு வணங்கினார். அப்பொழுது இறைவன் அவருக்குக் காட்சிகொடுத்து, அடியார்களின் பெருமையையும் அவர்களது வழித்தொண்டின் வரலாறுகளையும் அவருக்கு உணர்த்தி, அவர்களைப் பாடுவதற்கு, **''தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்''** என்று அடியும் எடுத்துக் கொடுத்தார். அவ்வாறு தொடங்கிச் சுந்தரர் திருத்தொண்டத் தொகையைப் பாடி முடித்தார்.

### 7. குண்டையூர்க்கிழார் நெல் பெற்றமை

சுந்தரரின் இல்வாழ்க்கை சிறப்பாக நடைபெறுவதற்குத் தேவையான பொருள்களை குண்டையூர்க்கிழார் என்ற செல்வர் வழங்கி வந்தார். இவ்வாறு நடைபெற்று வருகையில், மழை இல்லாமற் பஞ்சம் ஏற்பட்டதால், சுந்தரருக்கு நெல் அனுப்ப முடியவில்லை. எனவே, அவர் மிகவும் மனம் வருந்தி, ஒருநாள் இரவு உணவு உண்ணாமலே உறங்கினார். அன்று இரவு சிவபெருமான் அவருடைய கனவிலே தோன்றி, ''ஆரூரன் தனக்கு உன்பால் நெல் தந்தோம்'' என்று அருளினார். குண்டையூர்க் கிழார் நித்திரைவிட்டு எழுந்தபொழுது, அவரின் வீடு முழுவதும் நெல் நிறைந்திருந்தது. எனினும், அதனைத் திருவாரூருக்கு எடுத்துச் செல்ல ஆள் கிடைக்கவில்லை. நிலைமையைக் குண்டையூர்க் கிழார் சுந்தரருக்குத் தெரிவித்தார். இந்நிலையிற் சுந்தரர், **''நீள நினைந்தடியேன்''** என்ற பதிகத்தைப் பாடினார். அன்றிரவு பரவையாரின் மாளிகையில் நெல் மலையாகக் குவிக்கப்பட்டது.

### 8. சுந்தரர், 'சிங்கடியப்பன்'' 'வனப்பகையப்பன்' ஆனமை

திருநாட்டியத்தான் குடியிலே வாழ்ந்த கோட்புலியாரது அழைப்பை ஏற்று, நம்பியாரூரர் அங்கு சென்றார். அவரைக் கோட்புலியார் தமது மனையில் விருந்தினராக வரவேற்றார். பின்னர், அவர் தம் புதல்வியரான சிங்கடியாரையும் வனப்பகையாரையும் ஆட்கொண்டருள வேண்டும் என்று சுந்தரரை இரந்தார். ''இவ்விருவரும் எனக்குப் புதல்வியராவர்'' என்று கூறிச் சுந்தரர் அவர்களை உச்சி மோந்தார். அன்று முதல் சுந்தரர் தம்மைச் **'சிங்கடியப்பன்'** என்றும் **'வனப்பகையப்பன்'** என்றும் பதிகங்களில் அமைத்துப் பாடலானார்.

### 9. செங்கற்கள் பொன்கட்டிகளானமை

திருவாரூரிற் பங்குனி உத்தரத் திருவிழாச் செலவிற்காகப் பரவையாருக்குக் கொடுப்பதற்கு, சுந்தரருக்கு பொன் தேவையாக இருந்தது. எனவே, அவர் திருப்புகலூருக்குச் சென்று, இறைவனை வணங்கி, தமக்குப் பொன்


இலவச விநியோகத்திற்காக

தருமாறு இரந்தார். ஆயினும், அவருக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. மனச் சோர்வுடன் அண்மையிலிருந்த மடத்துக்குச் செல்ல நினைத்து, கோயில் முற்றத்தின் ஒருபக்கத்தில் அமர்ந்திருந்தார். அப்பொழுது சிவபெருமான் திருவருளால் நித்திரை வருதலும், அங்கிருந்த செங்கற்களாலே தலையணை அமைத்து, நித்திரை செய்தார். அவர் விழித்தபொழுது செங்கற்களெல்லாம் பொன்கட்டிகளாக இருந்தன. அப்பொழுது சுந்தரர், **''தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்''** என்ற திருப்பதிகம் பாடினார். பின்பு பொன்னை பரவையாரிடம் திருவிழாச் செலவுக்காகக் கொடுத்தார்.

## 10. சிவபெருமான் சுந்தரருக்கு வழிகாட்டியமை

நம்பியாரூரர் திருத்தல யாத்திரையை மேற்கொண்டு, பற்பல திருத்தலங்களுக்குச் சென்று, சிவபெருமானை வழிபட்டு ஆங்காங்கே திருப்பதிகமும் பாடினார். 'தில்லைக்குச் செல்ல வேண்டும்' என்றெண்ணிச் செல்லும் வழியில், திருக்கூடலையாற்றூரை வணங்காது, திருமுதுகுன்றத்துக்குச் செல்ல நினைத்தார். அப்பொழுது, அவருக்கு வழி தெரியாமற் போயிற்று. அவ்வேளையில், சிவபெருமான் அடியவராய் வந்து அவர்முன் நின்றார். சுந்தரர் திருமுதுகுன்றத்துக்குச் செல்ல வழி கேட்க, அவர் சுந்தரரைத் திருக்கூடலையாற்றூருக்கு அழைத்துச் சென்று மறைந்தார். சுந்தரர், தமக்கு வழிகாட்டியவர் சிவபெருமானே என்றுணர்ந்து, **''வடிவடை மழுவேந்தி''** என்ற பதிகம் பாடி, கூடலையாற்றூரை அடைந்து வழிபட்டு, அதன் பின்னர், திருமுதுகுன்றஞ் சென்றார்.

## 11. ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்தில் எடுத்தமை

அங்கு சென்ற சுந்தரர், அங்குள்ள இறைவனை வணங்கினார். சிவபெருமான் அவருக்குப் பன்னீராயிரம் பொன் கொடுக்க, அதனைத் திருவாரூரில் தருமாறு சிவபெருமானை வேண்டினார். அப்பொழுது, ''இப்பொன்னை மணிமுத்து ஆற்றிற் போட்டு, திருவாரூர்க் குளத்தில் எடுத்துக் கொள்'' என்று ஓர் ஒலி கேட்டது. அவ்வாறே, சுந்தரர் பொன்னை ஆற்றிற் போட்டபின் தில்லையையும் வழிபட்டுத் திருவாரூருக்கு மீண்டார். ஒருநாள், பரவையாரிடம் வாழ்ந்திருந்த போதுதிருமுதுகுன்றத்துச் சிவபெருமான் தமக்குப் பொன் தந்ததைக் கூறினார். பின்னர், இருவரும் குளத்தை அடைந்து, அங்கு பொன்னைத் தேட அது கிடைக்கவில்லை. ''ஆற்றில் போட்டு, குளத்தில் எடுக்கலாமோ?'' என்று பரவையார் கேலி செய்தார். சுந்தரர் துயரடைந்து, **''பொன் செய்த மேனி''** என்னும் திருப்பதிகத்தைப் பாடி, கடவுளைத் துதித்துப் பொன் பெற்றார்.

## 12. சிவபெருமான் தண்ணீர்ப்பந்தரும் பொதிச்சோறும் அருளியமை

பல தலங்களுக்கும் யாத்திரை சென்ற சுந்தரர், திருக்குருகாவூருக்குச் சென்றபோது, வழியில் கடும் வெயில் காரணமாக பசியும் தாகமும் அவரை வருத்தின. அதனையறிந்த சிவபெருமான், வழியில் தண்ணீர்ப்பந்தல் அமைத்து, அடியவர் வடிவில் அங்குபொதிச்சோறு வைத்துக் கொண்டிருந்தார். அங்கு வந்து சோறுண்டு துயில் கொண்டு இளைப்பாறிய சுந்தரர், விழித்தெழுந்து பார்த்தார். அடியவரைக் காணாமையால் வியப்படைந்து, **''இத்தனையாமாற்றை அறிந்திலேன்''** என்ற பதிகத்தைப் பாடினார்.

## 13. சங்கிலியாரை மணந்தமை

சுந்தரர் தொண்டை நாட்டிற்கு தலயாத்திரையை மேற்கொண்டு, திருவொற்றியூருக்குச் சென்றிருந்தார். அங்கே கயிலையில் சந்தித்த அநிந்திதையார் சங்கிலியார் என்னும் பெயருடன் ஆலயத்தில் சரியைத் தொண்டினைச் செய்து வந்தார். சங்கிலியாரைக் கண்ட சுந்தரர் அவரைத் திருமணஞ் செய்ய விரும்பினார். சுந்தரர், பரவையாரின் கணவர் என்பதை சங்கிலியார் அறிந்திருந்தார். அதனால், தம்மை விட்டுப் பிரிவதில்லை என்ற சத்தியம் பெற்றபின் திருமணத்துக்குச் சம்மதித்தார். திருமணம் நிகழ்ந்து, இருவரும் இனிதாக வாழ்ந்தனர்.

## 14. சுந்தரர் கண்பார்வை இழந்தமை

சுந்தரர் சங்கிலியாருடன் வாழ்ந்திருந்த காலத்தில் திருவாரூர்த் தியாகேசரின் நினைவும் பங்குனி உத்தரத் திருவிழாக் காணும் விருப்பும் ஏற்பட, அவர் அங்கிருந்து திருவாரூருக்குப் புறப்பட்டார். சங்கிலியாருக்குக் கொடுத்த சத்திய வாக்குறுதி தவறியமையால், சுந்தரர் இரு கண்பார்வையையும் இழந்து துயருற்றார். அடியார்களின் உதவியுடன் திருவெண்பாக்கம் அடைந்து, **''பிழையுளன பொறுத்திடுவீர்''** என்ற திருப்பதிகத்தைப் பாடி, இறைவன் அருளால் ஊன்றுகோல் பெற்றார்.

## 15. சுந்தரர் கண்பார்வை பெற்றமை

ஊன்றுகோலுடன் தலயாத்திரையைத் தொடர்ந்த சுந்தரர், காஞ்சிபுரத்தை (திருக்கச்சியேகம்பத்தை) அடைந்தார். அங்கு**'' கடையானேன் எண்ணாத''** என்ற பதிகத்தைப் பாடி வணங்கி, இடக்கண் பார்வை பெற்றார். இவ்வாறாகத் திருவாரூரை அடைந்த சுந்தரர், வன்மீகநாதரின் கோலத்தைக் காண்பதற்கு ஒரு கண் போதாமையால், மற்றைய


இலவச விநியோகத்திற்காக

கண்ணுந் தந்தருளவேண்டும் என்னுங் குறிப்போடு, **“மீளா அடிமை உமக்கே”** என்ற பதிகத்தைப் பாடி, வலக்கண் பார்வையையும் பெற்றார்.

## 16. சிவபெருமான் பரவையாரிடந் தூது சென்றமை

திருவொற்றியூரில் சுந்தரர் சங்கிலியாரை மணந்திருந்த செய்தியை அறிந்த பரவையார், கோபமடைந்தார். அவ்வேளையில், திருவாரூருக்கு வந்த சுந்தரர் பரவையாரின் இல்லத்துக்குப் போக விரும்பினார். பரவையார் அதற்கு உடன்படாமையால் சுந்தரர் சிவபெருமானையே பரவையாரிடந்தூது விடுத்தார். சிவபெருமான் பரவையாரின் ஊடலைத் தணித்து, சுந்தரரை அவரோடு சேர்த்து வைத்தார்.

## 17. ஏயர்கோன் கலிக்காம நாயனாருடன் நட்புக் கொள்ளல்

சிவபெருமானை சுந்தரர் தூது அனுப்பிய செய்தியை அறிந்த ஏயர்கோன் கலிக்காமர் என்ற அடியார் சுந்தரர்மீது கடுங் கோபமுற்றார். இதனைக் கேட்டும் உயிர் நீங்காத தான், சுந்தரரைக் கண்டால் மனம் இசையாது என்று வஞ்சினம் பூண்டார். ஆரூரரும் அதனை அறிந்து, தம் பிழையையும் உணர்ந்து இறைவனை வணங்கினார். இறைவன் அவர்களை ஒற்றுமையாக்குவதற்காக, கலிக்காமருக்குச் சூலை நொயைக் கொடுத்து, அதனைச் சுந்தரன் மட்டுமே நீக்கவல்லான் என்று அவருக்கு அறிவித்தார். சுந்தரருக்கும் அதனைத் தெரிவித்தார். எனவே, சுந்தரர் கலிக்காமரிடம் வருவதாக அறிவித்தார். இதனைக் கேட்ட கலிக்காமர், “அவன் வந்து என் நோயைத் தீர்ப்பதைவிட, நான் உயிரை விடுவது மேல்” என்று தம் உடைவாளாற் குத்தி உயிர் நீத்தார். அதன்பின் அங்கு வந்த சுந்தரர் மிக வருந்தித் தாமும் இறப்பதற்காக உடைவாளை எடுத்தார். அப்பொழுது இறைவன் அருளாற் கலிக்காமர் உயிர் பெற்றெழுந்து, சுந்தரரைத் தடுத்தார். இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கி, திருப்புன்கூர்க் கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கினர். சுந்தரர், **“அந்தணாளனுன்”** என்ற பதிகத்தைப் பாடியருளினார்.

## 18. காவிரி ஆறு பிரிந்து வழிவிட்டமை

சுந்தரர் திருவாரூரில் வாழ்ந்தகாலத்திலே, கழறிற்றறிவார் என்னும் சேரமான் பெருமாள் திருவஞ்சைக்களத்திலிருந்து சேரநாட்டை ஆண்டு வந்தார். அவர் சுந்தரரின் பக்தி மகிமையைக் கேட்டறிந்து, திருவாரூருக்குச் சென்று அவருடன் நட்புக் கொண்டார். அதனால், நம்பியாரூரருக்குச் **சேரமான் தோழர்** என்ற பெயரும் வழங்கலாயிற்று. அவர்கள் இருவருந் தலயாத்திரை மேற்கொண்டு, பாண்டி நாட்டுக்குச் சென்று, மதுரை முதலிய தலங்களை வணங்கினார். மதுரையிலே பாண்டிய மன்னனால் வரவேற்கப்பட்டனர். சுந்தரரும் சேரமான் பெருமாளும் திருக்குற்றாலம், திருநெல்வேலி முதலிய தலங்களை வழிபட்டு இராமேச்சரத்தை அடைந்தனர். சுந்தரர் அங்கிருந்து கொண்டே ஈழநாட்டிலுள்ள திருக்கேதீச்சரத்தை வணங்கிப் பதிகம் பாடினார். பாண்டி நாட்டை விடுத்து இருவருஞ் சோழ நாட்டை அடைந்து, திருவாரூர் சேர்ந்தனர். பின்னர் சேரமானின் வேண்டுகோளுக்கு இணங்கி, சுந்தரர் அவருடன் சேரநாட்டுக்குச் சென்றார். வழியிலே, காவிரி ஆறு பெருக்கெடுத்து ஓடிற்று. சுந்தரர் இறைவனை வேண்டிப் பதிகம் பாட, காவிரி ஆறு பிரிந்து வழிவிட்டது. இருவரும் ஆற்றைக் கடந்து சேரநாடு சேர்ந்தனர்.

## 19. வேடர்கள் சுந்தரரின் பொதிகளைக் கவர்ந்தமை

திருவஞ்சைக்களத்திலே சேரமான், சுந்தரரைச் சிறிது காலம் வைத்துப் பக்தியன்போடு ஆதரித்து வந்தார். சுந்தரருக்குத் திருவாரூர் நினைவு வர, அவர் சேரமானை அரிதிற் பிரிந்து, திருவாரூருக்குப் புறப்பட்டார். சேர மன்னர் அவருக்குப் பொன்னும் பிற பரிசில்களும் கொடுத்து, அவற்றைச் சுமக்க ஆட்களையும் அனுப்பினார். சுந்தரர் சேர நாட்டை விட்டு, திருமுருகன் பூண்டி வழியே வந்தார். அப்போது சிவபெருமானின் கட்டளைப்படி, பூத கணங்கள் வேடர்களாகத் தோன்றி, சுமையாட்கள் கொண்டுபோன பொதிகளையெல்லாம் பறித்தன. நம்பியாரூரர் கோயிலுக்குச் சென்று, **“கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்”** என்று தொடங்கும் பதிகம் பாட, சூறைபோன பொருள்கள் எல்லாம் திருவாயிலின் முன்னே கொண்டுவந்து வைக்கப்பட்டன. சுந்தரர் அவற்றைப் பெற்றுத் திருவாரூரைச் சேர்ந்தார்.

## 20. முதலையுண்ட பிள்ளையை மீட்டமை

திருவாரூரிலே வன்மீகநாதரை வழிபட்டு வருங்காலத்தில் சுந்தரருக்குச் சேரமான் பெருமாள் நினைவு வர, அவர் சேரநாட்டுக்குப் புறப்பட்டார். வழியிலே கொங்கு நாட்டிலுள்ள திருப்புக்கொளியூர் வீதி வழியே செல்லும்போது அங்கே ஒரு வீட்டில் மங்கல ஒலியும் எதிர் வீட்டில் அழுகை ஒலியுங் கேட்டன. அதனைக் கேட்டு வியப்புற்ற சுந்தரர், அதற்கான காரணத்தைக் கேட்டார். அவ்வூர்க் குளத்தில் நீராடச் சென்ற பிள்ளைகளில் முதலை விழுங்கிய சிறுவனை இழந்த பெற்றோரின் அவலக்குரல் ஒரு வீட்டில் ஒலிக்க, உயிர் பிழைத்து மீண்ட சிறுவனின் பூணூற் சடங்கு நிகழும் வீட்டில் மங்கல ஒலி கேட்கின்றதெனக் கூறினர். சுந்தரர் குளக்கரைக்குச் சேர். பொன். இராமநாதன்



இலவச விநியோகத்திற்காக

சென்று, திருப்புக்கொளியூர் அவிநாசிப் பெருமானை நினைத்து வணங்கி, **"ஏற்றான் மறக்கேன்"** என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார். அப்பொழுது கழிந்த ஆண்டுகளுக்கான வளர்ச்சியோடு இறைவன் திருவருளால், முதலை அப்பிள்ளையைக் கரையிற் கொணர்ந்து உமிழ்ந்தது. அதனைக் கண்ட எல்லோரும் சுந்தரரையும் அவிநாசியப்பரையும் போற்றினர்.


## 21. சுந்தரர் திருக்கயிலையை அடைந்தமை

சுந்தரர், சேர நாட்டிலுள்ள சிவத்தலங்களை வணங்கிக் கொண்டு, சேரமான் பெருமாளோடு வாழ்ந்து வருங்காலத்தில் ஒருநாள், திருவஞ்சைக்களக் கோவிலுக்குச் சென்று, தமக்கு இவ்வுலக வாழ்க்கையை முடித்து முத்தி தரும்படி வேண்டி, **"தலைக்குத் தலைமாலை"** என்னும் பதிகத்தைப் பாடினார். அப்பொழுது இறைவன் ஆணைப்படி, தேவர்கள் வந்து கோயில் வாயிலில் வைத்துச் சுந்தரரை வெள்ளை யானையில் ஏற்றிக் கயிலைக்குக் கொண்டு சென்றனர்.

சுந்தரர் தமது பதினெட்டாவது வயதில் கயிலை சேர்ந்தார். சுந்தரின் குருபூசைத் தினம் ஆடிச்சுவாதி நட்சத்திரமாகும். இறைவனோடு தோழமை பூண்டு பக்தி கொண்ட சுந்தரர் யோக நெறியில் நின்றவராவார். நம்பியாரூரர், ஆளுடைய நம்பி, வன்றொண்டர், திருநாவலூரர், தம்பிரான் தோழர், சேரமான் தோழர், சிங்கடியப்பன், வனப்பகையப்பன் என்பன சுந்தரமூர்த்தி நாயனாருக்கு வழங்கும் பிற பெயர்களாகும்.

"வாழி திரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி"

## (ஈ) மாணிக்கவாசக சுவாமிகள்



### 1. அறிமுகம்

சமய குரவர் நால்வரில் ஒருவரான மாணிக்கவாசக சுவாமிகள், ஏனைய மூவரிலும் வேறுபட்டவர். அவர் ஒருவரே மந்திரிப்பதவி வகித்தவர்; **தென்னவன் பிரமராயன்** என்னும் பட்டம் பெற்றவர். அவற்றையெல்லாம் துறந்து, ஆன்மீக வாழ்வுக்குத் தன்னை அர்ப்பணித்தவர்: இது அவரின் **முதற்சிறப்பு** ஆகும். தில்லை நடராசப் பெருமானே அவரது திருவாசகப் பாக்களை ஏட்டில் எழுதும் பெரும் புண்ணியம் செய்தவர். இது அவரின் **இரண்டாவது சிறப்பு** ஆகும். பசவர், போப்பையர் போன்றோரால்,**"உருக்கப் பண்பு நிறைந்த பாடல்களைப் பாடியவர்"** என்ற கணிப்பையும் மதிப்பையும் பெற்ற சமயகுரவர். காலம், இடம், மொழி, மதம் என்ற எல்லைகளைக் கடந்த இக்கணிப்பும் மதிப்பும் மாணிக்கவாசக சுவாமிகளின் சிறப்பின் சிகரமாகும்.

### 2. வாழ்வும் பணியும்

மாணிக்கவாசக சுவாமிகள் மதுரையை அடுத்துள்ள திருவாதவூர் என்னும் ஊரினர்; திருவாதவூரினர் என்னும் பெயரினர். அந்தணர் குலத்தைச் சேர்ந்த சம்புபாதாசிரியருக்கும் சிவஞானவதியாருக்கும் மகனாக திருவாதவூரர் பிறந்தார். மதுரை அக்காலப் பாண்டி நாட்டின் தலைநகர். அக்காலத்தில் பாண்டி நாட்டை அரிமர்த்தன பாண்டியன் என்ற மன்னன் ஆண்டான். அறிவாற்றல் மிக்க வாதவூரர், பாண்டியன் மகிழ, அரச சபையில் அமைச்சராகப் பணிபுரிந்தார். அவரது திறமைகளையும், பணியையும் மெச்சிய பாண்டிய மன்னன் **"தென்னவன் பிரமராயன்"** என்னும் பட்டத்தை அவருக்கு வழங்கினான். ஆயினும், உலகியல் வாழ்வில் நிலைபெறாத வாதவூரரது மனம் ஆன்மீக விசாரணையிலேயே நாட்டம் கொண்டது.

### 3. வாழ்க்கையில் திருப்பம்

கீழைக்கடற்கரையில், மரக்கலங்களில் அராபியக் குதிரைகள் வந்திறங்குவது வழக்கம். அக்குதிரைகளை வாங்கிவரும் பணியைப் பாண்டியன் மாணிக்கவாசகரிடம் ஒப்படைத்தான். அவர் பரிவாரங்களுடன் செல்லும்போது வழியில், **திருப்பெருந்துறை** என்னும் இடத்தில், குருந்தமர நிழலில் குருநாதர் ஒருவர் சீடர்களுக்கு ஞானோபதேசம் அளிக்கும் காட்சியைக் கண்டார். அவரின் சீடராகச் சேர்ந்து உபதேசம் பெற்றார்; அரச பணியை மறந்தார். பரிவாரத்தினர் மாணிக்கவாசகரின் செயல்களைப் பாண்டியனிடம் சென்று முறையிட்டனர். பாண்டியன் இதனை அறிந்தவுடன் மாணிக்கவாசகருக்குச் செய்தி ஓலை அனுப்பினான். மாணிக்கவாசகர், ஓலையைக் கொண்டு வந்த ஏவலாளர்களைக் கொண்டே அதனை வாசிப்பித்தார். "இறைவனின் அடியவனான எனக்குப் பாண்டியன் எவ்வாறு கட்டளை இடமுடியும்?" என்று குருநாதரிடம் அவர் வினவினார். அதற்குக் குருநாதர், "நீ மதுரைக்குப் போ; அங்கு



இலவச விநியோகத்திற்காக

ஆவணி மூல நாளிற் குதிரைகள் வருமென்று பாண்டியனுக்குத் தெரிவி'' என்று கூறினார். அத்துடன் அரசனுக்கு வழங்குமாறு மாணிக்கக்கல் ஒன்றினையுங் குருநாதர் மணிவாசகரிடங் கொடுத்தார். குருவின் சொல்லைச் சிரமேற் கொண்டு மணிவாசகர் மதுரைக்கு ஏகினார்.

## 4. திருவிளையாடற் சோதனைகள்

மணிவாசகர் கொண்டு சென்ற நிதி பற்றி வினவிய பாண்டியன், அவருக்குச் சிறைத்தண்டனை விதித்தான். சிறையதிகாரிகள் வாதவூரரை வருத்தினர். ஆவணி மூல நாளில் குதிரைகள் மதுரைக்கு வந்தமையால் பாண்டியன், மணிவாசகருக்கு விடுதலை வழங்கினான். கொற்றக் குதிரையில் வந்த குதிரை வணிகத் தலைவருக்குச் சிறப்புப் பரிசும் அளித்தான். இக்குதிரைகள் **சிவபிரானின் திருவிளையாடல**ால் பரிவடிவம் பெற்ற நரிகளாகும். சிவபிரானே, குதிரை வணிகத் தலைவனாக வந்தார் என்பதை மாணிக்கவாசகர் திருவாசகத்தில், பின்வருமாறு பாடியுள்ளார்.

**'பெற்றி பெறற்கரிய பெம்மான் பெருந்துறையான்**
**கொற்றக் குதிரையின் மேல் வந்தருளி'**

அன்றிரவு சிவபிரானின் **மற்றொரு திருவிளையாடல்** இடம் பெற்றது; பரிகள் மீண்டும் நரிகளாக மாறின. குதிரைப் பந்தியில் கட்டப்பட்டிருந்த உண்மைக் குதிரைகளைக் கடித்து, அவை ஊளையிட்டன. அதனை அறிந்த மன்னன் பாண்டியன் நிதி முழுவதையும் மீண்டும் ஒப்படைக்கும் வரை மணிவாசகருக்குக் கடுந்தண்டனை வழங்கினான். சிறையதிகாரிகள் வைகை ஆற்றுச் சுடுமணலில் நிறுத்தி, நெற்றியில் கல்லேற்றி அவரை வதைத்தனர்.

இந்நிலையில் மணிவாசகருக்கு அபயம் அளிக்கத் திருவுளம் கொண்ட சிவபிரான் **பிறிதொரு திருவிளையாடலை**ச் செய்தார். வற்றி வரண்டிருந்த வைகை நதி பெருகிக் கரை மீறிப் பாய்ந்து பெரும் அழிவுகளை ஏற்படுத்தியது. எனவே, மக்களின் கருத்திற்கு மதிப்புக் கொடுத்த பாண்டிய மன்னன் மணிவாசகருக்கு விதித்த தண்டனையை விலக்கினான். அதனையடுத்து, வெள்ளச்சேதம் எதிர்காலத்தில் நிகழாதவாறு வைகை நதிக்கு வெள்ளத்தடை அணைகட்டும் துரித பணியைக் கூட்டுறவு அடிப்படையில் நிறைவேற்றுமாறு பாண்டியன் ஆணையிட்.டான்.

மதுரைவாசிகள் அணை கட்டும் பணியில் ஈடுபட்டனர். ஆனால், 'செம்மனச் செல்வி' என்னும் 'பிட்டுவாணிச்சி' தனது பங்கை நிறைவேற்ற இயலாதவளாக இருந்தாள். இவ்வேளையில் சிவபிரான், செம்மனச்செல்விக்கு உதவுவதற்காகவும் மாணிக்கவாசகரின் மாண்பினை உலகுக்கு உணர்த்தவும் வாதவூரர் வாழ்வில் **நான்காவது திருவிளையாடலைப்** புரிந்தார். பிட்டுவாணிச்சியின் கூலியாளாக மாறி, அவரின் உதிர்ந்த பிட்டை உண்டும், மணலில் படுத்துறங்கியும் வேலை செய்யாது காலத்தை வீணே கழித்தார். இப்பொதுப்பணியை மேற்பார்வை செய்ய வந்த பாண்டிய மன்னன் பிட்டுவாணிச்சியின் பணி நிறைவேறாதது கண்டு, அவளது கூலியாளின் முதுகிலே தன் கையிலிருந்த பிரம்பால் ஓங்கி அடித்தான். கூலியாள் மறைய, அவ்வடி உலகிலுள்ள சகல உயிர்கள் மீதும் பட்டது. இச்சம்பவத்தை மாணிக்கவாசக சுவாமிகள்,

**''மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு**
**புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்''** என்று பாடியுள்ளார்.

மதுரை மக்களும் மன்னனும் சிவபிரானின் திருவிளையாடலை உணர்ந்தனர். மணிவாசகரின் மாண்பையும் மதித்தனர். பாண்டியன் மணிவாசகரின் விருப்பத்தை ஏற்று, அவர் ஞான நெறியைத் தொடர இணங்கினான்.

## 5. ஆலய தரிசனமும் சிதம்பர முத்தியும்

சுவாமிகள் அதன் பின்னர் தமது வாழ்க்கையை சமயத்திற்காகவே அர்ப்பணித்தார். அவர் திருத்தலங்கள் பலவற்றிற்கும் சென்று சிவபிரானை வழிபட்டார். அங்கெல்லாம் பதிகங்கள், பத்துக்கள் போன்ற பல பாசுரங்களைப் பாடினார். அவற்றில், தென்னாட்டுச் சைவரிடையே வழங்கிய, நாட்டுப் பாடல் வடிவங்களையும் இசை வடிவங்களையும், ஞானமும் பக்தியும் மிளிர, திருவம்மானை, திருச்சாழல், திருவெம்பாவை, திருக்கோத்தும்பி முதலிய பாடல் தொகுதிகளில் கையாண்டுள்ளார். தமது தல யாத்திரைகளின் போது, மாற்றுச் சமயத்தவரோடு வாதங்கள் பல புரிந்து வெற்றியீட்டியமை, ஊமை இளவரசியைப் பேசச் செய்தமை முதலான அற்புதங்களைச் செய்தார்.

மாணிக்கவாசக சுவாமிகள் தமது அந்திமக் காலத்தில் சிதம்பரத்தில் வாழ்ந்தார். ஒரு நாள் அந்தணர் ஒருவர் அவரிடம் வந்து, 'நீர் பாடிய பாடல்களை ஓத விரும்பி அவற்றை உம்மிடம் கேட்டு எழுதுவதற்கு வந்தேன்' என்று கூறினார். எனவே, அவர் அப்பாடல்களை மீண்டும் பாட, அந்தணர் அவற்றை ஏட்டில் எழுதினார். பின்னர், சிதம்பரநாதரைப் பாட்டுடைத் தலைவராக வைத்துக் கோவைப் பிரபந்தம் ஒன்று பாடுமாறும் அந்தணர் கேட்க, சுவாமிகளும் அவ்வாறே **திருக்கோவையாரைப்** பாடினார். அதனையும் எழுதியபின் அந்தணர் விரைவாக மறைந்துவிட்டார். அடுத்த நாள் காலையிலே தில்லைப் பெருமானுக்குப் பூசைசெய்ய வந்த தில்லை மூவாயிரவரில்


இலவச விநியோகத்திற்காக

சிலர், கோயிற் படியில் ஏடு ஒன்று இருக்கக் கண்டு வியந்தனர். அவர்கள் அதனை எடுத்துப் பார்த்த பொழுது, அதிலே **திருவாசகமும் திருக்கோவையாரும்** எழுதப்பட்டிருந்தன. ஏட்டின் ஈற்றில் "வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதியது" என்று அடிக்குறிப்பிட்டு எழுதி, "அழகிய சிற்றம்பலமுடையான்" எனக் கையொப்பமும் இடப்பட்டிருந்தது. அதனை அறிந்து வியந்த தில்லை மூவாயிரவர் பலர் அடிகளிடஞ் சென்று, "நீர் பாடிய பாடல்களுக்குப் பொருள் யாது?" என்று கேட்டனர். அவர்களை அழைத்துக் கொண்டு தில்லைப் பெருமானின் கோயிலுக்குட் சென்று, அங்கு அம்பலத்தரசனைச் சுட்டிக்காட்டி, 'இவரே அதன் பொருள்' என்று கூறிவிட்டுச் சிவசாயுச்சியம் அடைந்தார். 'சிவத்தோடு இரண்டறக் கலத்தல்' என்னும் அத்துவித முத்தியே, திருவாசகம் கூறும் ஞானமார்க்கத்தின் பொருள் என்பதை மாணிக்கவாசகரின் கடைசிச் சொல் உணர்த்துகின்றது.

**'கடையூழி வரும் தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள்**
**உடையார் உன்வாசகத்தில் ஒரு பிரதி கருதினதே'**

சிவபிரான், தனது கடையூழித் தனிமையைப் பொருண்மை மிக்கதாக மாற்றவே, அவர் திருவாசகப் பிரதியை எழுதத் திருவுளம் கொண்டார் என்னும் சுந்தரம்பிள்ளையவர்களின் (மனோன்மணீயம்) கூற்று, மாணிக்கவாசகரது திருவாசகத்தின் சிறப்பை எடுத்தியம்புகிறது.

ஞானநெறி நின்று, சைவசித்தாந்தக் கருத்துகளையும் இலக்கிய மரபுகளையும் பரப்பியவர் திருவாதவூரர். இவருக்கு மாணிக்கவாசகர், மணிவாசகர், பெருந்துறைப்பிள்ளை முதலான பெயர்கள் வழங்குகின்றன. திருவாதவூரர், தமது முப்பத்திரெண்டாவது வயதில் ஆனி மக நட்சத்திரத்தில் இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

**'வாழிதிரு வாதவூரர் பதம் போற்றி'**

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சம்பந்தரும் அப்பரும் இணைந்து செய்த அற்புதங்களைக் குறிப்பிடுக.
2. சமய குரவர் நால்வரும் கடைப்பிடித்த மார்க்கங்கள் யாவை.
3. மாணிக்க வாசகர் பாடிய நூல்கள் எவை?

## செயற்பாடு

**1. நாயன்மார் நால்வரதும் விபரங்களை உள்ளடக்கிய பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்து, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.**

| | சம்பந்தர் | அப்பர் | சுந்தரர் | வாதவூரர் |
|---|---|---|---|---|
| 1. பிறந்த நாடு | | | | |
| 2. பிறந்த ஊர் | | | | |
| 3. தாயாரின் பெயர் | | | | |
| 4. தந்தையாரின் பெயர் | | | | |
| 5. இயற் பெயர் | | | | |
| 6. வேறு பெயர்கள் | | | | |
| 7. முதல் பாடிய பதிகம் | | | | |
| 8. இறுதியாகப் பாடிய பதிகம் | | | | |
| 9. முத்தியடைந்த தினம் | | | | |
| 10. நின்ற நெறி | | | | |
| 11. நின்ற மார்க்கம் | | | | |
| 12. அடைந்த முத்தி | | | | |

### பாடச்சுருக்கம்

- சமய குரவர் நால்வரும் இறையருளுடன் அற்புதங்களைச் செய்து, மக்களின் துன்பங்களை நீக்கி, இறைபக்தியை வளர்த்தனர். சைவத்தின் சிறப்பினை நிலைநாட்டினர். சைவத்தின் மறுமலர்ச்சிக்காக உழைத்தனர். பதிகங்கள் பாடி, கோயில்களை முதன்மைப்படுத்தினர்.
- அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் என்னும் சமய குரவர் நால்வரும் முறையே, சரியை, கிரியை, யோக, ஞான நெறிகளைப் பின்பற்றினர்.
- நாம் சமய குரவர் நால்வரதும் குருபூசைத் தினங்களைக் கொண்டாடி, அவர்கள் செய்த பணிகளுக்கு மதிப்பளிப்போம்.



இலவச விநியோகத்திற்காக